**SC. No. 51 /2018**

P.W.13 - மூர்த்தி

தேதி: 01.03.2021.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

கே. எச் லெதர் கம்பனியிலிருந்து வேலூர் செல்லும் சாலையில் நான் வாகன தணிக்கை செய்துகொண்டிருந்தேன். அந்த இடத்திற்கு மாலை 4.15 மணிக்கு தணிக்கை செய்ய நாங்கள் வந்தோம். எங்களிடம் ஜீப் இருந்தது. ரத்தகாயத்துடன் விழுந்த கிடந்த நபரை நாங்கள் சென்று பார்த்தபோது அவருக்கு நினைவு இல்லை. தேசிய நெடுஞ்சாலையில் நடக்கும் விபத்துகளை புலனாய்வு செய்ய நெடுஞ்சாலை ரோந்து போலிசார் தனியாக இருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். நான் போக்குவரத்து புலனாய்வுதுறை அதிகாரிக்கு நான் தகவல் தெரிவித்தேன். அந்த இடத்தில் சமார் 1/4 மணி நேரம் இருந்தேன். நான் இருக்கும்போதே இரத்தினகிரி காவல் நிலைய போலிசார் அங்கு வந்திருந்தார்கள். போக்குவரத்து புலனாய்வு போலிசார் வரவில்லை. இரத்தினகிரி போலிசார் வரும் போது ரத்தகாயம் பட்ட நபர் அங்கே இருந்தார். நாங்களும் இரத்தினகிரி போலிசாரும் இணைந்து தான் ரத்தகாயம் பட்ட நபரை ஆம்புலன்சில் அனுப்பி வைத்தோம். என் முன் விசாரணையில் நான் வாகன தணிக்கை செய்யும் போது வாலாஜாவில் இருந்து இராணிப்பேட்டை நோக்கி இருசக்கர வாகனத்தில் 2 பேர் எங்களிடம் வந்து தகவல் கொடுத்தார்கள் என்றும் அதில் இண்டிகா காரில் ஒரு பெண்ணை கடத்துகிறார் என்றும் பேனட்டின் முன் பகுதியில் ஒருவர் பிடித்துகொண்டு போகிறார் என்றும் கார் வேகமாக செல்கிறது என்றும் சொன்னதின் அடிப்படையில் நான் மாவட்ட காவல்

கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கும் இரத்தினகிரி காவல் நிலையத்திற்கும் மற்றும் சத்துவாச்சாரி காவல் நிலையத்திற்கும் தகவல் கொடுத்தேன் என்ற விவரத்தை நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தகவல் கொடுத்த 2 பேரின் பெயர் விவரம் தெரியாது. அவர்கள் யாரும் என்னுடன் வரவில்லை. எங்களுக்கு முன்பாக இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள். நாங்கள் சென்ற வாகனத்தை ராஜசேகர் என்பவர் ஓட்டினார். எனக்கு தகவல் சொன்ன நபர்களை இரத்தினகிரி பாலத்தின் மேல் ரத்தகாயத்துடன் விழுந்து கிடந்த இடத்திலும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். 108 ஆம்புலன்ஸ் ஆகும். மேற்படி ஆம்புலன்ஸ்சை 108க்கு போன் செய்து வரவழைத்தேன். முனிசாமி மகன் சிவக்குமார் என்பவர் எனக்கு முன்பு பழக்கம் இல்லை. அறிமுகமும் கிடையாது. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல யாரும் என்னிடம் வந்து சொல்லவில்லை என்றும் நான் அங்கு செல்லவில்லை என்றும் யாரையும் ரத்தக்காயத்துடன் பார்க்கவில்லை என்றும் எந்த செயலையும் நான் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக மேல் அதிகாரிகளின் ஆலோசனைப்படி இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**SC. No. 51 /2018**
P.W.15 - காந்தி
தேதி: 01.03.2021.
சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.
எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் வாலாஜா பஸ் நிலைய ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டுகிறேன். என் நண்பர் சத்தீஷ்குமார் டெக்கரேஷன் தொழில் செய்கிறார். வாலாஜா பஸ் நிலையத்திற்கு எதிரில் தான் வாலாஜா காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். எங்களுக்கு சங்கம் உள்ளது நான் எந்த பொறுப்பிலும் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தை நான் பெங்களூரில் வைத்து போட்டேன். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்தை நான் வாலாஜாவில் வைத்து போட்டேன். அ.சா.ஆ.4ல் என்னுடைய கையெழுத்துக்கு மேலே என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியும். அ.சா.ஆ.5ல் என்னுடைய கையெழுத்துக்கு மேலே என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. நானும் சத்தீஷ்குமாரும் உறவினர்கள் அல்ல. லாவண்யா எனக்கு உறவினர் அல்ல. லாவண்யா எந்த சமூகத்தை சார்ந்தவர் என்று எனக்கு தெரியாது. நான் வாலாஜாவில் புஜண்டராவ் தெருவில் குடியிருக்கிறேன். சத்தீஷ்குமார் என்பவர் வாலாஜாவில் திருத்தணி தெற்கு தெருவில் குடியிருக்கிறார். எங்கள் தெருவிற்கும் வாலாஜா காந்தி நகருக்கும் இடையே சுமார் 1 1/2 கி.மீ தூரம் இருக்கும். திருவண்ணாமலைக்கு எந்த வழியாக போனோம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலிஸ் வாகனத்தில் சென்றேன். அது காரா, ஜீப்பா என்று தெரியாது. திருவண்ணாமலைக்கு போய்விட்டு விசாரித்துவிட்டு திரும்பிவிட்டோம். அங்கு தங்கவில்லை. மறுநான் பெங்களூருக்கு சென்றோம். அங்கு தங்கவில்லை. பெங்களூருக்கு போலிஸ் வாகனத்தில் சென்றேன். அது காரா, ஜீப்பா என்று தெரியாது. பெங்களூருக்கு எந்த வழியாக போனோம்

என்று எனக்கு ஞாபகம் இல்லை. பெங்களூருக்கு விடியற்காலை 6, 7 மணிக்கு சென்றோம். பெங்களூரில் எந்த பகுதியில் 2 நபர்களை காட்டினார் என்று எனக்கு தெரியாது. கார் எடுக்கும் போது எத்தனை கார்கள் உள்ளே இருந்தது என்று தெரியாது. நான் வெளியே நின்று கொண்டிருந்தேன். போலிசார் மட்டும் உள்ளே சென்று காரை எடுத்து வந்தார்கள். நான் சொன்ன மாதிரி போலிசார் திருவண்ணாமலைக்கு கூட்டி செல்லவில்லை என்றும் அங்கு கார்த்தியின் தகப்பனாரை விசாரிக்கவில்லை என்றும் அவர் எந்த தகவலையும் சொல்லவில்லை என்றும் ஆனந்தபாபுவை தேடி நாங்கள் பெங்களூர் செல்லவில்லை என்றும் ஆனந்தபாபு காவல் ஆய்வாளரிடம் எந்த தகவலையும் சொல்லவில்லை என்றும் அவர் சொன்னதாக எந்த வாக்குமூலமும் போலிசார் பதிவு செய்யவில்லை என்றும் ஆனந்தபாபு கொலை செய்யப்பயன்படுத்திய கார் மற்றும் 2 நபர்களை காட்டுவதாக நான் சொல்லியுள்ளவாறு எந்த தகவலையும் சொல்லவிலலை என்றும் ஆனந்தபாபு யார் வீட்டையும் காட்ட வில்லை என்றும் ஆனந்தபாபு சொன்னதின் அடிப்படையில் போலிசார் காரினை கைப்பற்றவில்லை என்றும் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் நான் சொன்னதுபோல தயார் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. காவல் நிலையம் எதிரில் நான் ஆட்டோ ஓட்டுகின்ற காரணத்தால் எனக்கு போல்சார் தயவு தேவை என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் வாலாஜா காவல் நிலையத்தில் வைத்து 2 கையெழுத்துக்களையும் போட்டுவிட்டு தற்போது போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.